**முதன்மை சார்பு நீதிமன்றம், திருப்பூர்.**

**OS.No. 393/2018**

திருமதி. விஜயா (P.W –2 ) **27.06.2023.**

**<u>சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

சாட்சி ஆஜர். சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார். நான் 6 ஆம் வகுப்பு வரை படித்துள்ளேன். எனக்கு தமிழ் எழுத படிக்கத் தெரியும். பிரதிவாதி புஷ்பா என்ன படித்துள்ளார் என்ற விவரம் எனக்குத் தெரியாது. பிரதிவாதிக்கு எழுத படிக்கத் தெரியுமா என்றால் எனக்குத் தெரியாது. பிரதிவாதி கையொப்பம் மட்டும் செய்வார். வழக்கு ஒப்பந்தத்தேதியில் பிரதிவாதி என்ன தொழில் செய்து வந்தார் என்ற விவரம் எனக்குத் தெரியாது. பிரதிவாதிக்கு 2 பெண் குழந்தைகள் உள்ள விவரம் தெரியும் மற்ற விவரம் எனக்குத் தெரியாது. பிரதிவாதியின் கணவர் இறந்த விவரம் எனக்குத் தெரியாது. கிரைய ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்ட தேதியில் எஸ் ஆர் வி என்ற பனியன் கம்பெனியில் சிங்கர் டைலராக வேலை செய்தேன். நான் வேலை செய்த கம்பெனியில் பிரதிவாதி வேலை செய்யவில்லை. 04.02.2016 ஆம் தேதி நான் கம்பெனிக்கு வேலை சென்றேன். அன்றைய தினம் நான் பகுதி நேரம் மட்டும் வேலை செய்தேன். மதியம் 2.30 மணிக்கு அவிநாசியில் உள்ள தட்டச்சு அலுவலகத்திற்கு சென்று பிறகு பத்திர அலுவலகத்திற்கு சென்றோம். என்னுடன் என் பெண் வந்தார். பிரதிவாதி தரப்பில் செந்தில்ராஜ் என்பவர் வந்து சாட்சி கையொப்பம் செய்தார். பின்பு பத்திர அலுவலகத்தில் தட்டச்சு செய்து படித்துக்காட்டினார்கள். பதிவாளர் அலுவலகத்தில் வைத்து கையொப்பம் செய்தோம். என்னுடன் செந்தில் ராஜ் என்பவரும சாட்சி கையொப்பம் செய்தார். நான் பத்திர அலுவலகத்திற்கு சென்று கையொப்பம் செய்யவில்லை என்றாலும் வாதியின் நிதி நிறுவனத்தில் வைத்து கையொப்பம் செய்து விட்டு பத்திர அலுவலகத்தில் கையொப்பம் செய்ததாக பொய் சாட்சியம் அளிக்கின்றேன் என்றாலும் சரியல்ல. வாதிக்கு நிதி நிறுவனமே இல்லை. வழக்குச் சொத்து என் வீட்டில் இருந்து 4 கி.மீ தூரத்தில் உள்ளது. ஒப்பந்தம் போட்ட தேதியில் வழக்குச் சொத்தின் ஒரு செண்டின் விலை ரூ. இரண்டரை லட்சம் என்றால் அது பற்றி எனக்குத் தெரியாது. ஒப்பந்தம் எழுத பத்திரம் யார் வாங்கினார்கள் என்ற விவரம் எனக்குத் தெரியாது. என் கணவர் 01.08.2020 ஆம் தேதி இறந்தார். 04.02.2016 ஆம் தேதி கருப்புசாமி

பிரதிவாதிக்கு ரூ. 3 லட்சம் பணம் கொடுத்தார் என்றால் சரிதான். பிரதிவாதி ரூ. 3 லட்சம் வட்டிக்குத்தான் பணம் வாங்கினார் என்றாலும் அதற்காகத்தான் நான் பிரதிவாதியை அறிமுகம் செய்து வைத்தேன் என்றாலும் ஒப்பந்தம் பாதுகாப்பிற்காக போடப்பட்டது என்றாலும் தற்போது நிலத்தின் மதிப்பு அதிகமாகிவிட்டதால் வாதி தாக்கல் செய்த வழக்கிற்காக நான் பொய் சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் **வா.சா.ஆ.1** ல் உள்ள முதல் கையொப்பம் செந்தில்ராஜ் என்பவருடையது ஆகும். 2 வது சாட்சி கையொப்பம் என்னுடையது ஆகும்.

சாட்சியின் கூற்று என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக் காண்பிக்கப்பட்டது. சாட்சி சரியாக உள்ளதென ஒப்புக் கொண்டு கையொப்பமிட்டார்.

P CHELLADURAI

Digitally signed by P CHELLADURAI
Date: 2023.06.27 17:29:28 +0530

முதன்மை சார்பு நீதிபதி,
திருப்பூர்.